**N THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No. S.T..C. No.456/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: PW1 cross | |
| Name | : Baskaran | Defence | : |
| Father Name | : Vadivel | Court | : |
| Village | :T.M.S Nagar ,Thiruvenkadu | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | :67/2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.09.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** ஆஜர் எதிரி எனது மனைவியின் பள்ளியில் பணிசெய்பவர் என்ற முறையில் தெரியும். எனது மனைவி இந்த வழக்கின் புகார்தாரர் என்றால் சரிதான். என் மனைவி நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உள்ளார் என்றால் சரிதான். நான் எனது மனைவியின் பவர் ஏஜென்ட் என்ற முறையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது மனைவிக்கு நேரடியாக சாட்சியம் சொல்வதில் ஏதேனும் சிக்கல் உண்டா என்றால் அவருக்கு வண்டி ஓட்ட தெரியாது என்பதாலும், என் மனைவி என்பதாலும் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். என் மனைவி தலைமையாசிரியராக இருந்து 2020-ம் ஆண்டு மே மாதம் பணிஓய்வு பெற்றுவிட்டார். என் மனைவி பணிஓய்வுக்கு பின்பு வட்டிக்கு கொடுக்கும் தொழில் செய்துவருகிறாரா என்றால் இல்லை.

2. எனது பிராதில் Pre Existing Liabilities காக காசோலை கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் மனைவி ஆஜர் எதிரிக்கு பணமாக கொடுத்தார் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளார் . Pre Existing Liabilities என்பது பணமாகவோ , பொருளாகவோஇருக்கலாம் என்றால் எனது மனைவி பணமாகத்தான் கொடுத்தார். என் மனைவிக்கு ஆஜர் எதிரி 31.08.2020 ம் தேதியிட்ட காசோலை எண் 316461-யை வழங்கினார். வங்கியில் 07.11.2020 ம் தேதி வசூலுக்காக வங்கியில் மேற்படி காசோலையை தாக்கல் செய்தோம்.

காசோலை தேதியிலிருந்து 03 மாதம் காலதாமதாக வசூலுக்கு தாக்கல் செய்ததற்காக காரணம் என்ன என்றால் ஆஜர் எதிரி பணத்தை திருப்பி கொடுத்து விடுவதாக கூறினார். மேற்படி விவரத்தை என் மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. ஆஜர் எதிரி என் மனைவியிடம் ரூ. 40 ஆயிரம் கடனாக பெற்றார் என்றாலும் அதற்காக 316461, 316462 எண் கொண்ட 2 காசோலை வழங்கினார் என்றாலும் சரியல்ல. எதிரி என் மனைவியிடம் வாங்கிய ரூ. 40 ஆயிரம் கடனுக்காக 316462 என்ற காசோலையை 29.05.2020 ம் தேதி வசூலுக்கு தாக்கல் செய்து பணமாக பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல. என் கணக்கிற்கு எதிரி கணக்கிலிருந்து ரூ. 40 ஆயிரம் பணபரிவர்த்தனை நடந்தது என்றால் சரியல்ல.

4. வழக்கு காசோலைக்கு அடுத்த 316462 எண் கொண்ட காசோலையை நாங்கள் பணமாக்கினோம் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி ஒரே நேரத்தில் 2 காசோலை கொடுத்ததால் வழக்கு காசோலைக்கு பின்னிட்ட காசோலையை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே வசூலுக்கு தாக்கல் செய்து பணமாக்கி விட்டோம் என்றால் சரியல்ல. 29.05.2020 அன்று ரூ. 40 ஆயிரத்தை காசோலையின் மூலம் எங்களுக்கு திருப்பி செலுத்திவிட்டு மற்றொரு காசோலையை திரும்பி கேட்டதற்கு இருவரும் ஒரே இடத்தில் தான் பணிப்புரிவதால் திருப்பி தருவதாக என் மனைவி கூறினார் என்றால் சரியல்ல. 23.03.2020 ம் தேதியிலிருந்து 28.09.2021 ம் தேதி வரை கொரோனா தொற்றால் அனைத்து பள்ளிகளுக்கும் விடுமுறை என்றால் என் மனைவி கொரோனா காலத்தில் 2 மாதங்கள் மட்டுமே பணிப்புரிந்து ஓய்வு பெற்று விட்டார்.

5. எதிரி சக ஆசிரியர் என்பதால் காசோலையை திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்று இருந்துவிட்டார் என்றால் சரியல்ல. எதிரி கடன் தொகையை திருப்பி செலுத்திய பின்னிட்டு எதிரியின் நம்பிக்கைக்கு துரோகம் செய்து இந்த வழக்கை தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. எதிரியின் விலாசம் தெரிந்திருந்தும், எதிரியின் விலாசத்திற்கு அறிவிப்பு அனுப்பாமல் , நாங்கள் எதிரியிடம் மேலும் பணம் பறிக்கும் வேண்டுமென்ற நோக்கில் பள்ளி விடுமுறை காலத்தில் பள்ளியின் முகவரிக்கு அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரியல்ல. கொரோனா காலமாக இருந்தாலும் ஆசிரியர்கள் சுழற்சி முறையில் பணிப்புரிந்து வந்தார்கள். நாங்கள் அனுப்பிய அறிவிப்பு அஞ்சல் துறையினாரால் Door Locked Intimation என்ற மேற்குறிப்புடன் எதிரிக்கு சார்வு செய்யப்படாமல் திருப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. Door Locked என்பது Unclaimed என்று அர்த்தமில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கு அறிவிப்பிய சமயத்தில் பணி தேர்வு முடிவு வெளியிட்டதால் விடுமுறை விடுப்பட்டிருந்தது. அன்றைய தினத்தில் அஞ்சல் துறையினரால் மேற்குறிப்பு செய்யப்பட்டு திருப்பப்பட்டுள்ளது. நான் எதிரிக்கு அறிவிப்பை சார்வு செய்யாமல் வழக்கை தாக்கல் செய்யமுடியாது என்றால் நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய பின்னிட்டுதான் வழக்கு தாக்கல் செய்தேன். எதிரியின் மீ"து இருந்த காழ்ப்புணர்ச்சி காரணமாக இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. நீதிமன்றத்தில் இருந்து அனுப்பட்ட அழைப்பாணையை பெற்றுக்கொண்ட எதிரி பள்ளியில் பணியில் இருந்திருந்தால் நான் அனுப்பிய அறிவிப்பை பெற்று இருப்பார் என்றால் அஞ்சல் துறையினாரால் சார்வு செய்ய சென்ற அன்றைய தினம் பள்ளி விடுமுறை விட்டதற்கு நான் பொறுப்பாகமுடியாது .ஆனால் எதிரி பணியில்தான் இருந்தார். எதிரி சக ஆசிரியர் என்றும் பாராமல் திட்டமிட்டு எதிரியின் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ளோம் என்றால் சரியல்ல.

8. எதிரி வாங்கிய கடனை திருப்பி செலுத்தியதற்கான வங்கி பரிவர்த்தனை கணக்கு உள்ளதால் எதிரி வாங்கிய கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையை பணத்தை பெற்றுக்கொண்ட பின்னிட்டு எதிரிக்கு திருப்பி கொடுக்காமல் மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.